[2004 பிப்ரவரி 12

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்: மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாட்டில் மாவட்டத் தலைநகரங்களில் ஒரு விளையாட்டுத் தலம் வீதம் உள்ளன. மற்றபடி ஒவ்வொரு கிராமத்திலும் அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையினைப் பெற்று நிதிநிலைமையைப் பொறுத்து முயற்சி செய்ய அரசு முன்வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. அன்பழகன்.

திரு. கு. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழர்களுடைய வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு விழாவையும் ஒரு வீர விளையாட்டாகத்தான் தமிழர்கள் கருதி வருகிறார்கள்; போற்றி வருகிறார்கள். ஆக, அந்த வகையிலே அந்த விளையாட்டையும் நம்முடைய விளையாட்டுக் கழகத்திலே சேர்ப்பார்களா? அதேபோன்று சங்க காலம் தொட்டு இன்று வரை தமிழகத்திலே பல்வேறு விளையாட்டுகள் இருக்கின்றன. அது எந்த எந்த விளையாட்டு என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரைப் போட்டு சித்திரவதை பண்ணாதீர்கள். (சிரிப்பு) வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி.

திருமதி. ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் 20 முதல் 27 வரையிலான 8 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன். போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால், குழுவின் 26

2004 பிப்ரவரி 12] [திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி]

மற்றும் 27-வது அறிக்கைகளை அச்சிட்டு அளிக்க இயலவில்லை. இவ்வறிக்கைகளின் படிப்பெருக்கி நகல்கள் உறுப்பினர்களின் பார்வைக்காக நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அச்சிடப்பட்ட பிரதிகள் கிடைத்தவுடன் உறுப்பினர்களுக்குத் தனியே அனுப்பி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. கே.என். இலட்சுமணன்.

திரு. கே.என். இலட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 189 முதல் 195 வரையிலான 7 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11-10

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. பி.எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 43 முதல் 48 வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஈ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திருமதி வளர்மதி ஜெபராஜ்.

திருமதி வளர்மதி ஜெபராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003-2004 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 43 முதல் 45 வரையிலான 3 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.